# மாம்சம் எதிர். ஆவி
## (8:5-13)

*பவுல் அடிக்கடி ஒன்றுபோலத்தெரியும் நேரெதிர்க்கருத்துக்களைப் பயன் படுத்தினார். பின்வரும் விவரிப்பில் அவரது நேரெதிர்க்கருத்துக்களில் சில உள்ளன:*




*7:14-25ல், மாம்சம் (புறம்பான மனுஷன்) மற்றும் ஆவி (உள்ளான மனுஷன்) ஆகியவற்றிற்கிடையில் நேர்மாறு உள்ளது. 8ம் அதிகாரம், மாம்சம் எதிர். ஆவி(பரிசுத்த ஆவி) என்பதை முதன்மையாகக் கருதுகிறது.[1] மாம்ச மானது மரணத்தைக் கொண்டுவருகிறது மற்றும் ஆவியானது ஜீவனைக் கொண்டுவருகிறது என்று பவுல் வலியுறுத்தினார்.*

## *இரண்டு திசைகள் (8:5-8)*

***காரணம் (வசனம் 5)***

*“கிறிஸ்துவுக்குள் ... ஆக்கினைத் தீர்ப்பில்லை” என்ற பாடம் 4ம் வசனத்துடன் முடிந்தது, அவ்வசனமானது, “மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடத்தல்” (வாழுதல்) பற்றிப் பேசியது. நமது இருதயங்கள் அல்லது மனங்களில் உண்டாகும் சிந்தனைகளில் இருந்தே செயல்கள் வருகின்றன (நீதிமொழிகள் 4:23; 23:7; லூக்கா 6:45 ஆகிய வசனங்களைக் காணவும்). ஆகையால், அடுத்ததாகப்*

பவுல், "அன்றியும் [*gar,* எதற்காகச் செய்கிறோம் என்ற காரணத்தைக் காட்டுதல்] மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள், ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள் (தங்கள் மனதை அதில் செலுத்துகிறார்கள்)" (ரோமர் 8:5).

சில மக்கள் "மாம்சத்தின்படி [*kata*] நடக்கிறவர்கள்" மற்றும் "ஆவியின்படி நடக்கிற" மற்றவர்கள் பற்றிக் குறிப்பிடுகிறது. மெக்கார்டு என்பவரின் மொழிபெயர்ப்பு வேதாகமம் முதல் குழுவினரை who live according to the flesh" என்றும் இரண்டாவது குழுவினரை "who live according to the Spirit" என்றும் பெயரிடுகிறது. NEB வேதாகமம், who "live on the level of" the flesh ["மாம்ச சிந்தையின் அளவுப்படி வாழ்கிறவர்கள்"] மற்றும் அதற்கு எதிராக who "live on the level of" the spirit ["ஆவிக்குரிய சிந்தையின் அளவுப்படி வாழ்கிறவர்கள்"] என்று பேசுகிறது.

"மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்" (வசனம் 5அ). "சிந்திக்கிறார்கள்" என்பது "ஒருவர் தமது சிந்தையை அமைத்தல் அல்லது விருப்பநோக்கம் கொள்ளுதல்"[2] என்று அர்த்தப்படுகிற, *phroneo* என்ற ஒரே கிரேக்க வார்த்தையிலிருந்து வருகிறது. *Phroneo* என்பது ஒரு நபருடைய மனவிருப்பத்தின் அடிப்படைத் திசையைக் குறிக்கிறது.[3] அது "நடத்தையைத் தீர்மானிக்கிறதான கீழ்மறைந்திருக்கும் வாழ்வின் எண்ணப்போக்கு" என்பதாக உள்ளது.[4]

நாம், "மாம்சத்துக்குரியவைகள்" என்ற சொற்றொடரைக் காணும்போது, ஒழுக்கவீனமானது அல்லது உள்ளாக இருக்கும் பொல்லாங்கு என்று நாம் நினைப்போம். "மாம்சத்துக்குரியவைகள்" என்பது அவ்வகையான நடக்கையை உள்ளடக்கியிருக்கலாம், ஆனால் இந்தச் சொற்றொடர் அத்துடன் மட்டுப் படுத்தப்பட்டிருப்பதில்லை. கலாத்தியர் 5:19-21ல் "மாம்சத்தின் கிரியைகளை" கண்ணோக்குங்கள். அதில் "விபசாரம்" [இது NIV வேதாகமத்தில் "immorality" என்றுள்ளது] மற்றும் "வெறிகள்" என்பவை இருக்கின்றன, ஆனால் "பொறாமை" மற்றும் "கலகம்" ஆகியவையும் அப்படிப்பட்டவைகளே.

"மாம்சத்தின் கிரியைகள்" என்பவை, கடந்துபோகிறதான தற்காலிக மான *இந்த* உலகத்தின் செயல்களாகவும் எண்ணப்போக்குகளாகவும் உள்ளன. மாம்சத்துக்குரியவைகளின்மீது "சிந்தையை வைத்தல்" என்பது அவ்வாறு செய்பவர்கள், பூமியால் கட்டப்பட்ட இந்த வாழ்க்கையில் ஈர்க்கப்பட்டு இருப்பதை அர்த்தப்படுத்துகிறது. அவர்கள் தங்களால் காண, சுவைக்க, அல்லது உணர முடிந்தவற்றின் மீது மாத்திரம் கவனம் செலுத்துகின்றனர். பிலிப்ஸ் வேதாகமத்தில், "The carnal [fleshly] attitude sees no further than natural things"[5] ["உலக நாட்டமுள்ள {மாம்சத்துக்குரிய} எண்ணப்போக்கு இயல்பான விஷயங்களுக்கு அப்பால் கண்ணோக்குவதில்லை] என்றுள்ளது. மத்தேயு 6:31 வசனம், மாம்ச சிந்தை கொண்ட மனிதரின் "திரித்துவத்தை"ப் பட்டியலிடுகிறது:[6] " 'என்னத்தை உண்போம்?' அல்லது 'என்னத்தைக் குடிப்போம்' அல்லது 'என்னத்தை உடுப்போம்?' " பவுல், "அவர்களுடைய தேவன் வயிறு ... அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள்" என்று எழுதினார் (பிலிப்பியர் 3:19). ஒரு தனிநபர் சந்தோஷமிக்கவராக, இரக்கமுள்ளவராக, ஈர்ப்புள்ளவராக, கல்வி கற்றவராக, கலாச்சாரமிக்கவராக, பிரபலமானவராக, கடின உழைப்பாளியாக மற்றும் நல்லதொரு அயலாராக இருக்கலாம் - இருப்பினும் அவர் இன்னமும்

*"மாம்சத்துக்குரியவைகளின்மீது தமது மனதைச் செலுத்தியவராக" இருக்கிறார்.*

*இதற்கு நேர்மாறாக, "ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள் [அவற்றின்மீது தங்கள் மனதைச் செலுத்துகிறார்கள்]"[7] (ரோமர் 8:5ஆ). "ஆவிக்குரியவைகள்" என்பவை தேவனின் ஆவிக்குரிய அக்கறைகளாக, நித்தியத்திற்குரிய விஷயங்களாக உள்ளன. சட்டபடி, இவை காணப்பட இயலாது, ஆனால் காணப்படுபவற்றைவிட இவைகள் அதிக உண்மை யானவைகளாக உள்ளன. இந்த உலகப்பொருட்கள் என்றென்றைக்குமாக அழிந்துபோகும்போது, இவைகள் அழியாதவையாயிருக்கும்.*

*ஆவிக்குரியவற்றின்மீது மனதைச் செலுத்துதல் என்பது சுலபமல்ல. நாம் ஐந்து புலன்களால் அனுபவிக்கப்படக்கூடியவற்றினால் சுற்றிச் சூழப்பட்டிருக்கிறோம். நமக்குக் குறிப்பிட்ட சில பொருட்கள் அல்லது சேவைகள் தேவை, அதாவது அவைகள் நமது மகிழ்ச்சிக்கும் நல்வாழ்விற்கும் முக்கியமானவைகளாக உள்ளன என்ற செய்தியால் மோதப்பட்டிருக்கிறோம்.[8] நாம் கிறிஸ்தவர்களாக இருப்பினும்கூட, நாம் எப்போதும் நினைத்துக்கொண்டிருப்பதெல்லாம் மாம்சத்தைப் பராமரித்தல் பற்றியே என்றிருக்கும்போது, மாம்சத்தின்படியான சிந்தனையைக் கொண்டிராதிருத்தல் என்பது ஏறக்குறைய சாத்தியமற்றதாக உள்ளது. அதனால்தான், நமது வாழ்வின் முக்கியமையப்பகுதியில் நாம், பின்வருபவைபோன்று ஆவிக்குரியவற்றில் நமது கவனத்தைத் திருப்பும் விஷயங்களைக் கொண்டிருக்க வேண்டும்:*

- *வேதாகம வாசிப்பு மற்றும் படிப்பு.*
- *ஊக்கமான மற்றும் அடிக்கடியான ஜெபம்.*
- *சபையின் ஆராதனைகளில் உண்மைநிறைவுடன் கலந்து கொள்ளுதல்.*
- *கர்த்தருடைய ஊழியத்தில் ஈடுபாடு.*
- *ஆவிக்குரிய சிந்தைகொண்ட.*
- *கிறிஸ்தவர்களுடன் தொடர்பு.*

***விளைவு (வசனம் 6)***

*மாம்சச்சிந்தைக்குப் பதிலாக ஆவிக்குரிய சிந்தையைக் கொண்டிருத்தல் என்பது ஏன் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது? ஒருபுறத்தில், "மாம் சத்தின் [phronema, இது phroneo, "சிந்தனை" என்பதன் பெயர்ச்சொல் வடிவ மாக உள்ளது] சிந்தை மரணமாக உள்ளது" (வசனம் 6அ). ஒவ்வொருவரும் (ஆவிக்குரிய சிந்தையுள்ளவர்கூட) சரீரப்பிரகாரமாக மரிப்பதால், இவ்விடத்தில் "மரணம்" என்பது ஆவிக்குரிய மரணத்தை - அதாவது இப்போதும் நித்தியத் திற்கும் தேவனிடத்திலிருந்து பிரிந்து இருத்தலைக் (ஏசாயா 59:1, 2ஐக் காணவும்) குறிப்பதாக இருக்க வேண்டும்.*

*இன்னொரு புறத்தில், "ஆவிக்குரிய சிந்தை ஜீவனும் சமாதானமுமாக" உள்ளது (ரோமர் 8:6ஆ). "ஜீவன்" என்பது ஆவிக்குரிய ஜீவனைக் குறிக்கிறது: இது, "தேவனுடன் ஆவிக்குரிய வகையில் இணைவும் ஐக்கியமும் கொண்டிருத்தல் மற்றும் அதிலிருந்து விளையும் ஆசீர்வாதங்கள்" என்பதாக உள்ளது.[9] "சமாதானம்" அந்த "ஜீவனுடன்" இணைவுகொண்டுள்ளது. 5:1ல் பவுல், "இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால்,*

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய்த் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்'' என்று கூறினார். கிறிஸ்தவர்கள் என்ற வகையில், நாம் ஆவிக்குரிய விஷயங்களில் நமது சிந்தையை அமைக்கும்போது, அந்தப் பரலோக சமாதானம் இன்னும் ஆழமாகத் தொடருகிறது.

**உண்மைநிலை (வசனங்கள் 7, 8)**

மாம்சத்தின்மீது சிந்தைவைப்பதன் நிறைவான விளைவைப் பற்றிப் (அதாவது, மரணம்) பவுல் உரைத்திருந்தார், ஆனால் அவ்வகையான சிந்தை அமைவின் நகைப்புக்குரிய மற்றும் பரிதாபமான நிலையைத் தெளிவாக்க அவர் விரும்பினார். அவர், "மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை'' என்று கூறினார் (8:7அ). "பகை'' என்பது, "மற்றவரை *வெறுத்து எதிர்த்தல்*'' என்பதற்கான *echthros* என்பதிலிருந்து வந்த *echthra* என்ற வார்த்தையின் மொழிபெயர்ப்பாகும்.[10] லியோன் மோரீஸ் என்பவர், இது "இலேசாகக் கூட்டுறவற்றிருத்தல் என்று மாத்திரம் அர்த்தப்படுவதில்லை''; மாறாக, "இது நேரிடியான பகையாக உள்ளது'' என்று எழுதினார். அத்துடன் அவர், *echthra* என்பது பலத்த சொற்றொடராகும், "அது நீர்த்துப்போகச் செய்யப்படக்கூடாது'' என்றும்கூட எழுதினார்.[11]

இந்த உலகத்துடன் பழக்கமாகியுள்ள ஒரு நபரிடத்திலிருந்து வரும் ஒரு மறுப்புரையை நான் கற்பனை செய்ய முடிகிறது: "ஆனால் நான் தேவ பக்தியை எதிர்ப்பதில்லை. நான் பயங்கரமான விஷயங்களைச் செய்வதில்லை. தேவனைப்பற்றிய பயங்கரமான நினைவுகளை நான் கொண்டிருப்பது இல்லை.'' அவை யாவும் உண்மையாக இருக்கலாம் - ஆனால் இந்த உலகத்தின்மீது மாத்திரம் கவனம் குவித்திருப்பவர், தமது வாழ்விற்குத் தேவன் கொண்டுள்ள நோக்கத்தைக் காணாது விடுகிறார். அவர் தேவனை எதிர்த்து அவருக்கு முரணாக நிற்கிறார். அது அவரைத் தேவனுக்குப் *பகையாக்குகிறது.*

அடுத்ததாகப் பவுல், மாம்சசிந்தையானது "தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலும், கீழ்ப்படியக்கூடாமலும் இருக்கிறது'' என்று கூறினார் (வசனம் 7ஆ). "தேவனுடைய நியாயப்பிரமாணம்'' என்பது இந்த சந்தர்ப்பப்பொருளில் மோசேயின் நியாயப்பிரமாணமாக உள்ளது,[12] ஆனால் இந்த கொள்கை, தேவன் எந்த வேளையிலும் கொடுத்துள்ள எந்தப் பிரமாணத்திற்கும் நடைமுறைப்படுவதாயிருக்கிறது. 7:14-25ல், பவுல் மாம்சம் மேற்கொண்டிருந்த காரணத்தினால் தாம் மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள இயலாதிருந்ததாகக் குறிப்பிட்டார். இன்றைய நாட்களில், மாம்சசிந்தை கொண்டவர்கள் தேவனுடைய பிரமாணத்தைக் கைக்கொள்வதில்லை மற்றும் அவர்களால் அதைக் கைக்கொள்ள இயலாது என்பது இன்னமும் உண்மையாகவே உள்ளது.

சிலர், "... கீழ்ப்படியக்கூடாமலும் இருக்கிறது'' என்ற சொற்றொடரில், "முற்றிலுமான வழிவழியான சீரழிவு'' என்ற தவறான உபதேசத்திற்கு நிரூபணத்தைக் காண்கின்றனர், ஆனால் பவுல் இவ்விடத்தில் ஒரு புதிய சிந்தனையை அறிமுகப்படுத்தவில்லை. அவர் 7:14-25ல் ஏற்படுத்திய கருத்தை மறுவலியுறுத்தம் செய்தார். மாம்சசிந்தை கொண்டுள்ள ஒருவர்/ஒருத்தி, தேவனுடைய நியாயப்பிரமாணத்திற்கு அவரது/அவளது சிந்தையைக் கீழ்ப்படுத்துதல் ஏன் சாத்தியமற்றதாக உள்ளது? கொள்கை சுலபமானதாகவே உள்ளது. நீங்கள்

பிடிவாதமாக மேற்கு நோக்கிச் சென்றுகொண்டிருந்தால் உங்களால் கிழக்கு திசையில் செல்ல இயலாது. நீங்கள் பிடிவாதமாகத் தண்ணீருக்குள் குதித்துக் கொண்டிருந்தால் உங்களால் உலர்ந்த நிலையில் இருக்க இயலாது. நீங்கள் உண்ணவோ குடிக்கவோ மறுத்தால் வயிறு நிறைந்திருத்தல் என்பது உங்களுக்குச் சாத்தியமற்றதாக இருக்கும்.

இவ்வாறு பவுல், "மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்க மாட்டார்கள்" என்று முடித்தார் (8:8). "மாம்சத்துக்குட்பட்ட" என்பது "மாம்சத்தினால் ஆக்கப்பட்ட உடலில் வசித்தல்" என்று அர்த்தப்படுவதில்லை, ஏனென்றால் அது நம்மில் *எவரும்* தேவனுக்குப் பிரியமாயிருக்க இயலாது என்று அர்த்தப்படுவதாக இருக்கும். மாறாக, "மாம்சத்துக்குட்பட்டு" இருத்தல் என்பது ஒருவர் தமது மனித (மாம்ச) ஆதாரமூலங்களையே முழுவதுமாகச் சார்ந்து, தேவனுடைய உதவியின்றியே வாழ முயற்சிசெய்தல் என்பதாக உள்ளது.[13] அது தேவனுடைய ஆவியினால் ஆளப்படுவதற்குப்பதிலாக மாம்சத்தினால் ஆளப்பட்டிருத்தலாக உள்ளது (வசனம் 9உடன் ஒப்பிடவும்).

சிலருக்கு 8ம் வசனம் எதிர் உச்சக்காட்சியாகக் காணப்படலாம். தேவனுக்குப் பிரியமில்லாது இருத்தல் என்பதைக் காட்டிலும் (வசனம் 8) ஆவிக்குரிய மரணம் (வசனம் 6) மிகவும் மோசமானதாக இருப்பதில்லையா? உண்மையில் அவ்வாறு இல்லை. நாம் தேவனைப் பிரியப்படுத்தாதபோது, நாம் நமது இருப்பின் நோக்கத்தை நிறைவேற்றுவதில்லை (வசனம் 4ன் மீதான கலந்துரையாடலைக் காணவும்). ஒருவர் தேவன் விரும்புகிற வகையில் இராவிட்டால், அவர் பூமியில் வேறு எந்தச் சாதனைகளைச் செய்தாலும், அவரது வாழ்வு முற்றிலும் தோல்வியாகவே உள்ளது!

## வாசம்பண்ணும் இருவர் (8:9-11)

மாம்சத்தினால் ஆளப்பட்டிருத்தல் என்பதை ஆவியினால் ஆளப்பட்டிருத்தல் என்பதற்கு நேரெதிராகப் பவுல் பேசியிருந்தார். 9ம் வசனத்தில் தொடங்கி அவர், ஒரு தனிப்பட்ட விண்ணப்பத்தை ஏற்படுத்தினார். அவர் படர்க்கைப் பெயர்ச்சொல்லிருந்து ("அவர்கள்"; வசனம் 8) முன்னிலைப் பெயர்ச்சொல்லுக்கு ("நீங்கள்"; வசனம் 9) மாறினார்.

"வாசமாயிருத்தல்" என்பது ரோமர் 8:9-11ல் ஒரு திறவுகோல் வார்த்தையாக உள்ளது (வசனங்கள் 9, 11ல் காணவும்). 7:17, 20ல், பவுல் தமக்குள் *பாவம்* வாசம்பண்ணியதாகப் பேசியிருந்தார். "வாசம்பண்ணுதல்" (*oikeo*) என்பது ஒரு சுருக்கமான வந்துபோகுதலையல்ல, ஆனால் "ஒருவருடைய குடியிருப்பை ஆக்கிரமித்துக்கொள்ளுதல்" என்று அர்த்தப்படுகிறது என்பதாக நாம் குறிப்பிட்டிருந்தோம். 8:9-11ல் பவுல், செயல்விளைவில், பழைய மாம்சத்திற்குரிய வாசம்பண்ணுபவனைப் புதிய தெய்வீகமான வாசம்பண்ணுபவருடன் நேரெதிராக ஒப்பிட்டார்.

9ம் வசனம் தேவன் *செய்துள்ளவற்றைச்* சிந்தைக்கு அழைக்கிறது: நாம் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டபோது, அவர் ஆவியானவரை ஒரு கொடையாக நமக்குக் கொடுத்தார். 10ம் வசனம் தேவன் செய்கிற சிலவற்றைக் குறிப்பிடுகிறது: அவர் நமக்குக் கொடுத்த ஆவியானவர் மூலமாக நமக்கு ஜீவனை உறுதியாகத் தருவதாக வாக்களிக்கிறார். 11ம் வசனம் தேவன் *செய்யப்போகும்* சிலவற்றைக் குறிப்பிடுகிறது: அவர் நமக்குக் கொடுத்த ஆவியின்மூலமாக அவர்

*ஒரு நாளிலே நம்மை மரித்தோரிலிருந்து எழுப்புவார்.*

**தேவன் செய்துள்ளவை என்ன (வசனம் 9)**

*''மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்கமாட்டார்கள்'' என்று பவுல் கூறியிருந்தார் (வசனம் 8). ''தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள்'' என்று அவர் கூறினார் (வசனங்கள் 9அ, ஆ). இந்தக் கூற்றில், ''நீங்கள்'' என்பது அழுத்தம் மிகுந்ததாக உள்ளது.[14] அப்போஸ்தலர், ''மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்க மாட்டார்கள்'' என்று கூறினார் (வசனம் 8), ''ஆனால் உங்களைப் பொறுத்த மட்டில் அது உண்மையாக இருப்பதில்லை; ஏனென்றால் நீங்கள் மாம்சத்துக்கல்ல ஆனால் ஆவிக்கு உட்பட்டவர்களாக இருக்கிறீர்கள்.''*

*''ஆல்'' என்பது உள்ளடக்கப்பட்டுள்ளது: ''தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால் ...'' (வசனம் 9அ). பெந்தெகொஸ்தே நாளன்று பேதுரு, தமது உரையைக் கேட்டவர்களிடத்தில், ''நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்'' என்று கூறினார் (நடபடிகள் 2:38). அந்த வசனப்பகுதியில் ''பரிசுத்த ஆவியின்வரம்'' என்பது, மேன்மைப்படுத்தப்பட்ட கர்த்தரால், தேவனுடைய அதிகாரத்தின் பேரில் பொழியப்பட்ட ''ஆவியானவரையே'' குறிக்கிறது.[15] நடபடிகள் 5:32ல் அப்போஸ்தலர், ''தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்த ஆவி'' என்று உரைத்தார். ஞானஸ்நானத்தின்போது பெற்றுக்கொள்ளப்படுகிற இந்த அற்புதமற்ற கொடை, ''உள்ளாக வாசம்பண்ணும் ஆவி'' என்று அழைக்கப்படுகிறது (ரோமர் 8:9, 13, 16, 17, 26; 2 தீமோத்தேயு 1:14; 1 கொரிந்தியர் 6:19; கலாத்தியர் 4:6, 7; எபேசியர் 1:13, 14 ஆகியவற்றைக் காணவும்).*

*கிறிஸ்தவர்களுக்குள் பரிசுத்த ஆவியானவர்* எவ்வாறு *''வாசம்பண்ணுகிறார்''? இந்தக் கேள்வியை நாம் 8:9, 11 மீதான பிந்திய பாடம் ஒன்றில் கலந்துரையாடுவோம். இவ்வேளைக்கு, நான் இரண்டு சத்தியங்களை மாத்திரம் குறிப்பிட விரும்புகிறேன். முதலாவது, ஏற்கனவே கருத்துத் தெரிவித்தபடி, 8ம் அதிகாரத்திலுள்ள ஆவியானவர் உள்ளாக வாசம்பண்ணுதல் என்பது 7ம் அதிகாரத்திலுள்ள பாவம் வாசம்பண்ணுதல் என்பதற்கு நேரெதிரானதாக உள்ளது. பாவமானது ஒரு நபருடைய இருதயத்தில் குடியிருக்க இடம் பிடிக்கக் கூடுவதுபோன்றே, தேவனுடைய ஆவியானவரும் இருதயத்தில் தமது குடியிருப்பை ஏற்படுத்த விரும்புகிறார். ஒரு நபருக்குள் ''பாவம்'' வாசம்பண்ணுகிறபோது, அவரது வாழ்வைப் பாவம் கட்டுப்படுத்துகிறது. இவ்வாறாக, அவருக்குள் ஆவியானவர் ''வாசம்பண்ணும்''போது, அவரது வாழ்வை ஆவியானவர் கட்டுப்படுத்த வேண்டும். இரண்டாவது, ரோமர் 8ல் உள்ளாக வாசம்பண்ணுதல்* எவ்வாறு *என்பதல்ல, ஆனால் உள்ளாக வாசம்பண்ணுதல் என்ற* உண்மையே *பவுலின் வலியுறுத்தமாக இருந்தது. கிறிஸ்தவராகவுள்ள ஒவ்வொருவரும் தமக்குள் ஏற்கனவே பரிசுத்த ஆவியானவர் வாசம்பண்ணுதலைப் பெற்றுள்ளார், இது அவரது வாழ்வில் ஒரு வேறுபாட்டை ஏற்படுத்த வேண்டும்!*

*நாமகரணக் கூட்டங்களைச் சேர்ந்த பல எழுத்தாளர்களும் பிரசங்கியார்களும், இரட்சிக்கப்படுதல் மற்றும் பரிசுத்த ஆவியானவரைப் பெறுதல் ஆகிய*

இரு நிகழ்வுகளும் வெவ்வேறு வேளைகளில் நடைபெறுகின்றன என்று போதிக்கின்றனர். (நான் ஒரு சிறுபையனாக இருந்தபோது, நாமகரணக் கூட்டத்தை சேர்ந்த சில பிரசங்கியார்கள், ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளுதல் என்பதை "கிருபையின் இரண்டாவது கிரியை" என்று குறிப்பிட்டனர்.) இருப்பினும், ஒவ்வொருவரும் தமது கடந்தகாலப் பாவங்களிலிருந்து இரட்சிக்கப்படும் அதேவேளையில் பரிசுத்த ஆவியானவரை ஒரு வரமாகப் பெறுகிறார் - அதாவது, அந்த நபர் வசனரீதியாக ஞானஸ்நானம் பெறும்போது இது நடைபெறுகிறது (நடபடிகள் 2:38) என்று வேதாகமம் போதிக்கிறது. மோரீஸ் என்பவர், ஆவியானவரைப் பெறுதல் என்பது சிலாக்கியம் பெற்ற ஒருசிலருக்கானதாக இருப்பதில்லை, ஆனால் அது "ஒரு கிறிஸ்தவராக இருப்பதற்கே சாதாரணமான மற்றும் அத்தியாவசியமான அம்சமாக உள்ளது" என்று குறிப்பிட்டார்.[16] H. C. G. மௌல் என்பவர், நாம் "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடமிருந்து பரிசுத்த [ஆவியினால்] ஆளப்படுகிற உயர்வான அல்லது ஆழமான வட்டாரத்திற்கு முன்னேறியிருப்பதாக ஒரு கணத்திற்குக்கூட நினைக்கக்கூடாது" என்று எழுதினார்.[17]

பவுல், "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல" என்று தொடர்ந்தார் (ரோமர் 8:9இ). நீங்கள் பரிசுத்த ஆவியைக் கொண்டிராவிட்டால், அது நீங்கள் வசனரீதியாக ஞானஸ்நானம் பெறவில்லை என்று அர்த்தமாகிறது (நடபடிகள் 2:38). நீங்கள் வசனரீதியாக ஞானஸ்நானம் பெறாதிருந்தால், நீங்கள் "கிறிஸ்துவுக்குள்" இருப்பதில்லை (ரோமர் 6:3-5ஐக் காணவும்). நீங்கள் "கிறிஸ்துவுக்குள் இராதிருந்தால்" நீங்கள் அவருக்கு "உரியவர்கள்" அல்ல.

போதகரும் பிரசங்கியாருமான ஜார்ஜ் டிப்ஸ் என்பவர் ரோமர் 8:9ன்மீது விளக்கம் அளிக்கும்போது, அவர் "கிறிஸ்துவின் ஆவியை" கிறிஸ்தவரின் *இதயத் துடிப்பு* என்று அழைக்கிறார். ஒரு நோயாளி உயிருடன் இருக்கிறாரா இல்லையா என்று தீர்மானிக்க முயற்சிசெய்யும் ஒரு மருத்துவர், முதலில் நாடி மற்றும் இதயம் துடிப்பதை சோதிக்கிறார். இதயத்துடிப்பு இல்லையென்றால், அந்த நோயாளி இறந்தவராக இருக்கிறார். அதுபோலவே, கிறிஸ்துவின் ஆவியில்லாத நிலையில் ஒரு தனிநபர் ஆவிக்குரிய வகையில் மரித்தவராக இருக்கிறார்.[18]

ரோமர் 8:9இயின் சிந்தனையைச் சில மொழிபெயர்ப்புகள் பின்வருமாறு விளக்குகின்றன: "ஒரு மனிதர் கிறிஸ்துவின் ஆவியை உடையவராக இல்லாதிருந்தால், அவர் கிறிஸ்தவரல்ல" (NEB; NLTஐக் காணவும்). இது ஒரு நேரடியான மொழி பெயர்ப்பல்ல, ஆனால் இது "கிறிஸ்தவர்" (*Christianos*) என்பது "கிறிஸ்துவுக்குரிய ஒருவர்" என்று அர்த்தப்படுவதால், இவ்வசனப் பகுதியின் கருத்தைக் கொண்டு வருகிறது.[19] பவுலின் கூர்மையான வார்த்தைகளைத் தவறாகப் புரிந்துகொள்ளுதல் கடினமாயிருக்கும்: நீங்கள் ஆவியைக் கொண்டிராதிருந்தால், நீங்கள் கிறிஸ்துவுக்குரிய*வரல்ல.* J. D. தாமஸ் என்பவர், "கிறிஸ்தவருக்குள் ஆவியானவர் எந்தக் கருத்துணர்வில் வாசம்பண்ணினாலும், அவர் அந்தக் கருத்துணவில் பிரசன்னமாகாதிருந்தால், அந்த நபர் உண்மையில் ஒரு கிறிஸ்தவரல்ல!" என்று எழுதினார்.[20]

இரட்சிக்கப்படுதலும் ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளுதலும் வெவ்வேறு வேளைகளில் நடக்கின்றன என்று போதிப்பவர்களுக்கு இது கவலைப்படக்கூடிய ஆதாரமூலமாக உள்ளது. செயல்விளைவில், அவர்கள் ஒருவர் இரட்சிக்கப்பட முடிந்திருந்தும் அவர் இன்னமும் கிறிஸ்தவர்

(கிறிஸ்துவுக்குரியவர்) ஆகாதிருக்க முடியும் என்று போதிக்கின்றனர். அவர்கள் தங்கள் உறுப்பினர்களைத் தேவனிடத்தில், ஆவியானவரின் கொடைக்காக "ஆவியானவர் உள்ளே வரும்படிக்குத் தங்கள் இருதயத்தைத் திறக்க வேண்டு மென்று" கெஞ்சும்படி வற்புறுத்துகின்றனர். அவர்களின் எழுத்துக்கள், கடைசியாக அவர்கள் "ஆவியானவரைப் பெற்ற"போது அவர்கள் "அனுபவித்ததாக" அந்த எழுத்தாளர்கள் நம்புகிற விவரங்களினால் நிரப்பப்பட்டுள்ளன.

ரோமர் 8:9ம் வசனம் ஆவியானவரைப் பெறுகிற விஷயமானது "பாஷை களில் பேசுதல்" போன்ற "அருங்கொடை" அனுபவங்கள் சிலவற்றை உள்ளடக்கி யிருக்கிறது என்று போதிப்பவர்களுக்கு விசேஷமான அக்கறை உடையதாக உள்ளது. நடைமுறை நோக்கங்கள் யாவற்றிற்காகவும், அப்படிப்பட்ட போதனையானது, அவர்களின் குழுவிலுள்ள ஒரு உறுப்பினர் "அருங்கொடை" அனுபவம் கொண்டிராத வரையில், அவர் உண்மையில் இயேசுவுக்குரியவராக இருப்பதில்லை மற்றும் அவர் கிறிஸ்தவராக இருப்பதில்லை என்று உரிமை கோருகிறது. இந்த ஐக்கியங்களில் ("பாஷைகளில் பேசுதல்" அல்லது வேறு ஏதாவது) "நிகழ்த்துதலுக்கு" நிலையான தயக்கமற்ற அழுத்தம் உள்ளது.

ரோமர் 8ல், பவுல் ஆவியை "பெற்றுக்கொள்ளும்படி" கிறிஸ்தவர்களை வற்புறுத்தவில்லை. அவர்கள் ஏற்கனவே ஆவியைக் *கொண்டிருந்தனர்* - மற்றும் இந்த உண்மை அவர்களின் வாழ்வில் செயல்தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் - என்றுதான் அவர்களுக்கு அவர் நினைவூட்டிக்கொண்டிருந்தார்.

10ம் வசனத்திற்குக் கடந்து செல்லுமுன்பு, நாம் பரிசுத்த ஆவியானவரைப் பற்றி 9ம் வசனம் கூறுகிற பல விஷயங்களைக் கவனிக்க வேண்டும். முதலாவது, ஆவியானவர் "தேவனுடைய ஆவி" என்றும் "கிறிஸ்துவினுடைய ஆவி" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதை உற்றுக் கவனியுங்கள். "தேவத்துவத்தில்" உள்ள நபர்களுக்கிடையில் சில வித்தியாசங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் (ரோமர் 1:20; கொலோசெயர் 2:9). இருப்பினும், அம்மூவரும் முற்றிலும் பிரிக்கப்பட இயலாத அளவுக்கு நெருக்கமாக தொடர்புகொண்டுள்ளனர். தேவத்துவத்தில் ஒரு உறுப்பினர் செய்கிறதை மற்றவர்களும் செய்வதாகக் கூறப்படுகிறது. இவ்வாறாக பரிசுத்த ஆவியானவர் *தேவனுடைய* ஆவியாகவும் *கிறிஸ்துவினு டைய* ஆவியாகவும் இருக்கிறார். (ரோமர் 8ல் நபருக்குள் வாசம்பண்ணும் ஆவியானவருக்கும் [வசனம் 9] நாம் கிறிஸ்துவைப் பெற்றிருத்தலுக்கும் [வசனம் 10] இடையில் வித்தியாசம் எதுவும் ஏற்படுத்தப்பட்டிருப்ப தில்லை.) இரண்டாவது, 9ம் வசனம் நாம் "ஆவிக்குள் இருத்தல்" பற்றியும் ஆவியானவர் "நமக்குள்" இருத்தல் பற்றியும் பேசுகிறது என்பதைக் கவனி யுங்கள். இவ்விரு உருவகங்களின் ஒன்றிணைவானது, கிறிஸ்தவருக்கும் ஆவியானவருக்குமிடையிலான உறவில் நிலவ வேண்டிய நெருக்கத்தை வலியுறுத்துகிறது.

**தேவன் செய்கிறவை என்ன (வசனம் 10)**

நமக்குள் வாசம்பண்ணுவதற்கு ஆவியானவரைப் பெற்றிருத்தல் மூலமாக நாம் பெறும் பயன் என்ன? 10ம் வசனம், "கிறிஸ்து உங்களிலிருந்தால்" என்று கூறுகிறது. இவ்வசனத்தில் "ஆல்" என்பது "ஆகையால்" என்று அர்த்தப்படுகிறது மற்றும் "கிறிஸ்து உங்களில் இருத்தல்" என்பது "தேவனுடைய ஆவி [பரிசுத்த ஆவி] உங்களில் வாசமாயிருத்தல்" (வசனம் 9) என்பதைக் குறிக்கிறது.

*கிறிஸ்துவின் ஆவி உங்களுக்குள் இருப்பதால், "சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும் ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும்[21] இருக்கும்" என்று அறிவித்தார் (வசனம் 10ஆ).*

*10ம் வசனத்தில் "சரீரம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது 11ம் வசனத்தி லுள்ள "சாவுக்கேதுவான சரீரமாக" உள்ளது.[22] நீங்கள் ஒரு கிறிஸ்தவராகவும் உங்களுக்குள் வாசம்பண்ணும் ஆவியைக் கொண்டவராகவும் இருந்தாலும், உங்கள் சரீரமானது இன்னமும் பௌதீக மரணத்திற்குக் கீழ்ப்பட்டதாகவே உள்ளது. அது "[ஆதாமின்] பாவத்தினிமித்தம் மரிப்பதாக உள்ளது."[23] அது உண்மையாக இருந்தாலும், உங்கள் "ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயிருக்கிறது"[24] - ஏனென்றால் நீங்கள் இயேசுவின் இரத்தத்தின் மூலம் நீதிமானாக்கப்பட்டீர்கள்.[25] இங்கு ரோமர் 8:10ஆவைப் பற்றிச் சிந்திக்க ஒரு எளிமையான வழியுள்ளது: ஆதாமினிமித்தம் உங்கள் சரீரம் மரித்திருக்கிறது, ஆனால் கிறிஸ்துவினிமித்தம் உங்கள் ஆவி ஜீவனுள்ளதாயிருக்கிறது!*

### தேவன் செய்யப்போவது என்ன (வசனம் 11)

*இது பரிசுத்த ஆவியானவருடைய ஊழியமானது மனிதரின் ஆவியுடன் கட்டுப்படுத்தப்பட்டு, நமது சரீரங்களின்மீது எந்த செயல்விளைவுமற்றதாக உள்ளது என்று அர்த்தப்படுகிறதா? 11ம் வசனம் "இல்லை" என்று பதில் அளிக்கிறது. இவ்வசனம் இப்பகுதியின் அடிப்படைக் கொள்கையுடன் தொடங்குகிறது: "அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருப்பதால்" (வசனம் 11அ). "இயேசுவை மரித்தோரி லிருந்து எழுப்பினவருடைய ஆவி" என்பது "தேவனுடைய ஆவி" என்று கூறுவதற்கான ஒரு நீளமான வழிமுறையாக உள்ளது. இவர் இயேசுவை மரித்தோரிலிருந்து உயிர்ப்பித்த அதே தேவன் என்ற உண்மையே இங்கு வலியுறுத்தப்படுகிறது.* அந்தத் *தேவனின் ஆவி உங்களில் வாசமாயிருப்பதால், "கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் ... சாவுக்கேதுவான உங்கள் சரீரங் களையும் உயிர்ப்பிப்பார்" (வசனம் 11ஆ).*

*புதிய ஏற்பாடு, சரீர உயிர்த்தெழுதல் பற்றிக் கூறுவதற்கு அதிகமானவற்றைக் கொண்டுள்ளது, மற்றும் வழக்கமாக நமது உயிர்த்தெழுதல் இயேசுவின் உயிர்த்தெழுதலுடன் பிணைக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, பவுல் "... கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவர் ... நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்" (பிலிப்பியர் 3:20ஆ, 21ஆ) என்று எழுதினார். சரீர உயிர்த்தெழுதல் குறித்த மிகநீண்ட கலந்துரை யாடல் 1 கொரிந்தியர் 15ல் உள்ளது. அந்த அதிகாரத்திலிருந்து சில திறவுகோல் வசனங்கள் கீழே தரப்படுகின்றன:*

> *கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார் (வசனம் 20).*
>
> *ஆகிலும், மரித்தோர் எப்படி எழுந்திருப்பார்கள், எப்படிப்பட்ட சரீரத்தோடே வருவார்களென்று ஒருவன் சொல்வானாகில், புத்தி யீனனே, நீ விதைக்கிற விதை செத்தாலொழிய உயிர்க்கமாட்டாதே. நீ விதைக்கிறபோது, இனி உண்டாகும் மேனியை விதையாமல், கோதுமை*

*அல்லது மற்றொரு தானியத்தினுடைய வெறும் விதையையே விதைக்கிறாய். அதற்குத் தேவன் தமது சித்தத்தின்படியே மேனியைக் கொடுக்கிறார்; விதைவகைகள் ஒவ்வொன்றிற்கும் அதற்கேற்ற மேனியையே கொடுக்கிறார் (வசனங்கள் 35-38).*

*மரித்தோரின் உயிர்தெழுதலும் அப்படியே இருக்கும். அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும்; கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்; பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும். ஜென்மசரீரம் விதைக்கப் படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்; ஜென்மசரீரமுமுண்டு, ஆவிக்குரிய சரீரமுமுண்டு (வசனங்கள் 42-44).*

இப்போது நாம் ரோமர் 8:11ஆவின் ஆச்சரியம் நிறைந்த வாக்குத்தத்தத் திற்குத் திரும்புவோம்: “கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங் களையும் உயிர்ப்பிப்பார்”! ஜான் R. W. ஸ்டாட் என்பவர், “உயிர்த்தெழுதல் என்பது மாற்றத்தையும் உள்ளடக்குகிறது, நமது உடல் உயிர்ப்பிக்கப்பட்டு நமது ஆளுமைத்தன்மையின் புதிய மற்றும் மகிமையுள்ள வாகனமாக மாறுகிறது, மற்றும் சகல நலிவு, வியாதி, வேதனை, அழிதல் மற்றும் மரணம் ஆகியவற்றிலிருந்து அது விடுதலை பெறுகிறது” என்று விளக்கம் அளித்தார்.[26]

11ம் வசனத்தின் பிற்பகுதியைப் பொறுத்தமட்டில் இரண்டு விளக்கங்கள் முறையானவையாக உள்ளன. முதலாவது, உயிர்த்தெழுதலில், தேவன் நமது ஆத்துமாக்கள் வசிப்பதற்காகச் சரீரங்கள் *சிலவற்றை* உருவாக்கமாட்டார். மாறாக, அவர் *நமது* “சாவுக்கேதுவான சரீரங்களுக்கு” ஜீவனை அளிப்பார். மண்ணுக்குத் திரும்புகிற சாவுக்கேதுவான சரீரத்திற்கும் உயிர்ப்பிக்கப்படும் அழியாத சரீரத்திற்குமிடையில், தனிச்சிறந்த உறவு ஒன்று இருக்கும். ஒரு *தொடர்நிகழ்ச்சி* மறைமுகமாக உணர்த்தப்பட்டுள்ளது. நான் இதைப் புரிந்துகொள்கிறேனா? இல்லை, ஆவிக்குரிய, அழியாத, மகிமையுள்ள, வல்லமை நிறைந்த சரீரம் ஒன்றைப் பற்றி என்னால் முழுவதும் புரிந்துகொள்ள இயலவில்லை (1 கொரிந்தியர் 15:42-44). இருந்தபோதிலும், 11ஆ வசனப்பகுதி, உயிர்த்தெழுதலுக்குப் பின்பும் நான் *நானாகவே* இருப்பேன் என்பதற்கு உறுதிப்பாடாக உள்ளது.

இரண்டாவதாக, சாவுக்கேதுவான நமது சரீரங்களுக்குத் தேவன் உயிரளிப்பார் என்று பவுல் கூறியபோது, “உயிர்” என்பது மரித்தோரிலிருந்து உயிர்ப்பித்தல் என்பதைவிட அதிகமானவற்றை அர்த்தப்படுத்துகிறது. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில், நல்லவர்கள் தீயவர்கள் ஆகிய அனைவரின் சரீரங்களும் கல்லறையிலிருந்து வெளியே வரும் (யோவான் 5:28, 29). ரோமர் 8:11ல் “உயிர்” என்பது “உயிரின்” முழுமையான கருத்துணர்வைக் குறிப்பதாக உள்ளது: தேவனுடைய பிரசன்னத்தில் இருத்தல். விசுவாசமுள்ளவர்களுக்குத் தேவனுடைய பிரசன்னத்தில் இருக்கப் பொருத்தமான சரீரங்கள் தரப்படும் - அவை தேவனுடைய மகிமையான பிரசன்னத்தில் என்றென்றைக்கும் வாழக்கூடிய மற்றும் வாழும் சரீரங்களாக இருக்கும். இவ்வாறு நமது “சாவுக்கேதுவான சரீரங்கள்” “அழியாமையுள்ளவை” ஆக்கப்படும்.[27]

இவை யாவும் எவ்வாறு நடைபெறும்? சரீர உயிர்த்தெழுதலானது,

நமக்குள் வாசம்பண்ணும் ஆவியுடன் ஏதோ ஒருவகையில் உறவுபடுத்தப் பட்டுள்ளது. இங்கு 11ம் வசனத்தில் திறவுகோல் சொற்றொடர்கள் உள்ளன: "அன்றியும் ... ஆவி ... உங்களில் வாசமாயிருந்தால் ... [தேவன்] உங்களில் வாசமா யிருக்கிற *தம்முடைய ஆவியினாலே* சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்." அடிக்கடி விஷயம் இப்படியாகவே இருப்பதால், பவுல் நமது அதீத ஆர்வத்தைத் திருப்திப்படுத்தப் போதுமான அளவுக்கல்ல, ஆனால் நமது ஆர்வத்தைத் தூண்டப் போதுமானவற்றை மாத்திரம் நமக்குக் கூறினார்.

"னாலே" என்பது *dia* என்ற முன்னிடைச் சொல்லிலிருந்து வருகிறது. இரண்டாம் வேற்றுமைத் தொடரைத்[28] தொடர்ந்து வருகிற இந்த *dia* என்பது "அதினாலே" என்று அர்த்தப்படுகிறது. பழைய கையெழுத்துப் பிரதிகள் சிலவற்றில், "உங்களில் வாசமாயிருக்கிற ஆவி" என்பது இரண்டாம் வேற்றுமைத்தொடரில் இருப்பதால், ரோமர் 8:11ன் முடிவுப்பகுதியானது, 2 கொரிந்தியர் 5ல் பவுல் கூறியதைச் சொல்வதாக இருக்கலாம். அங்கு, பவுல் "பரம வாசஸ்தலத்தைத் தரித்துக்கொள்ளுதல்" (வசனம் 2) பற்றிய தமது ஊக்க மான விருப்பத்தைப் பற்றிக் கலந்துரையாடியபின்பு, அவர் "இதற்கு நம்மை ஆயத்தப்படுத்துகிறவர் தேவனே, ஆவியென்னும் அச்சாரத்தை நமக்குத் தந்தவரும் அவரே" என்று கூறினார் (வசனம் 5). ரோமர் 8:11ஆ, நமக்குள் வாசம்பண்ணுகிற ஆவியானவர் நமது உயிர்த்தெழுதலுக்கு *உத்தரவாதமாக* இருக்கிறாரென்று கூறுவதாக *இருக்கலாம்.*

மற்ற பழைய கையெழுத்துப் பிரதிகளில், *dia* என்பதைத் தொடர்ந்து நான்காம் வேற்றுமைத் தொடர் வருகிறது, இது "மூலமாக, வழியாக" என்று அர்த்தப்படுத்துகிறது. இந்த வாசிப்பு பெரும்பான்மையான மொழி பெயர்ப்பாளர்களால் விரும்பித் தேர்ந்துகொள்ளப்படுகிறது மற்றும் இது, நமது சரீர உயிர்த்தெழுதலில் பரிசுத்த ஆவியானவர் செயல்முனைப்புடன் ஈடுபடுவார் என்று சுட்டிக்காட்டும். J. W. மெக்கார்வி என்பவர், "தேவன் [இயேசுவை மரித்தோரிலிருந்த உயிர்ப்பிக்கப் பயன்படுத்திய] அதே முகமையைப் பயன்படுத்தினால், நாம் அதே விளைவுகளை எதிர்நோக்கலாம்" என்று விளக்கினார்.[29]

உயிர்த்தெழுதலில் ஆவியானவரின் மிகச்சரியான பணிப்பொறுப்புபற்றி நாம் உபதேசரீதியாக எதுவும்கூற இயலாது.[30] உள்ளாக வாசம்பண்ணும் அவரது பிரசன்னம், நாம் உயிர்ப்*பிக்கப்படுவோம்* என்பதை உறுதிப்படுத்துகிறது என்று அறிதல் போதுமானதாக உள்ளது!

## இரண்டு கடன்கள் (8:12, 13)

மாம்சம் மற்றும் ஆவி ஆகியவற்றிற்கிடையிலான பவுலின் நேரெதிரான ஒப்பீடு, 12 மற்றும் 13ம் வசனங்களில் முடிவடைகிறது. இவ்வசனங்கள் கடன்களைப் பற்றியும் - ஒன்று உரைக்கப்பட்டுள்ளது மற்றும் இன்னொன்று மறைமுகமாக உணர்த்தப்பட்டிருக்கிறது - ஆவியானவருக்கு நமது கடனை நிறைவேற்றுதலின் முக்கியத்துவம் பற்றியும் பேசுகின்றன.

**நாம் பட்டுள்ள ஒரு கடன் (வசனம் 12)**

12ம் வசனம் "ஆகையால்" என்று தொடங்குகிறது; பவுல் தாம் முன்னிறுத்திய சத்தியங்களின் மிகக்குறிப்பான நடைமுறைப் பயன்பாட்டை

ஏற்படுத்தத் தயாரானார். அவர் தமது வாசகர்களை, பிரியம் மற்றும் அக்கறையை வெளிப்படுத்தும் "சகோதரரே" என்ற சொற்றொடரைக் கொண்டு குறிப்பிட்டார். அவர், "ஆகையால் சகோதரரே, மாம்சத்தின்படி பிழைப்பதற்கு நாம் மாம் சத்துக்குக் கடனாளிகளல்ல" என்று கூறினார் (வசனம் 12). "கடனாளிகள்" என்பது சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதில் தமக்குரிய பொறுப்பைப் பற்றிப் பவுல் குறிப்பிடுவதற்கு 1:14ல் அவரால் பயன்படுத்தப்பட்ட *opheiletes* என்ற வார்த்தையிலிருந்து வந்துள்ளது. என்னிடத்திலுள்ள NASB வேதாகமப்பிரதியில், 1:14ல் "கடனாளிகள்" என்பதற்குப் பின்வரும் குறிப்பு உள்ளது: "நேரடியான அர்த்தத்தில் *கடன்பட்டுள்ளவர்.*" 8:12ல் பல மொழிபெயர்ப்பாளர்கள் "நாம் கடன்பட்டுள்ளவர்களாய் இருக்கிறோம்" என்று குறிப்பிட்டுள்ளனர் (KJV; RSV; ESV; McCord வேதாகமத்திலும் காணவும்). என்னைப்பொறுத்தமட்டில் "கடனாளிகள்" என்ற சொல்லானது "under obligation" என்ற சொற்றொடரைக் காட்டிலும் அதிக கனமானதாகக் காணப்படுகிறது.

நாம் யாருக்கு (அல்லது எதற்கு) கடன்பட்டிருக்கிறோம்? முதலில் பவுல் இனியும் நாம் பட்டிராது உள்ள ஒரு கடனைப்பற்றிக் குறிப்பிட்டார்: "மாம் சத்தின்படி பிழைப்பதற்கு நாம் மாம்சத்துக்குக் கடனாளிகளல்ல" (8:12ஆ). நாம் கிறிஸ்தவராவதற்கு முன்பு, நம் "பாவத்துக்குக் கீழாக விற்கப்பட்டிருந்தோம்" (7:14) மற்றும் அதன் விலைக்குறிப்பிற்குக் கடமைப்பட்டிருந்தோம். இருப்பினும் நாம் ஞானஸ்நானம் பெற்று தேவனுடைய குடும்பத்தில் அங்கமான போது, தேவன் நமக்குள் வாசம்பண்ணும்படி தமது ஆவியை நமக்குள் அனுப்பினார். ஆகையால், நாம் இனி பாவம் கட்டளையிடுகிறவற்றைச் செய்யும் கடமையைக் கொண்டிருப்பதில்லை! ரிச்சர்டு ரோஜர்ஸ் என்பவர் பின்வருமாறு குறிப்பிட்டார்:

> ... மாம்சமானது நம்மிடத்தில் ஒரு விஷயத்தை வற்புறுத்துகிறபோது மாம் சத்தினிடத்தில், "நாம் உனக்கு நான் எதையும் தரவேண்டியதில்லை. நான் உனக்குக் கடன்பட்டிருப்பதில்லை. நான் உன்னிடத்திலிருந்து அனுகூலம் எதையும் தரவழைப்பதில்லை. நீ எனக்கு நன்மையான ஒன்றையும் செய்யவில்லை. நீ என் வாழ்வில் நன்மை எதையும் கொண்டுவந்ததில்லை. உனக்கு நான் ஒரு விஷயத்திலும் கடனாளியாக இருப்பதில்லை" என்று கூற முடியும்.[31]

யூஜீன் பீட்டர்ஸன் என்பவர், ரோமர் 8:12 பற்றிய தமது தரவழைப்பில் பின்வரும் நகைச்சுவையின் தொடுதலை உள்நுழைத்தார்: "... நாம் இந்தப் பழைய ... வாழ்விற்கு ... ஒருபைசாகூட ... கடன்பட்டிருப்பதில்லை. அதில் நமக்காக எதுவுமே இல்லை, ஒன்றுமே இல்லை. செய்யவேண்டிய நல்ல காரியம் என்னவென்றால், அதற்கு ஒரு நல்ல அடக்கம்செய்துவிட்டு, உங்கள் புதிய வாழ்வைத் தொடர வேண்டும் என்பதே" (MSG).

சபையின் உறுப்பினர்களில் சிலர், தாங்கள் மாம்சத்திற்குக் கடனாளிகள் என்றும், தங்களின் மாம்ச இச்சைகளுக்குக் கடன்பட்*டுள்ளவர்கள்* என்றும் தங்களைப்பற்றி நினைத்துக்கொண்டுள்ளதாகக் காணப்படுகின்றனர். அவர்கள் பாவம் செய்யும்போது, "அது என் கட்டுப்பாட்டிற்குப் புறம்பே இருந்தது" என்று சிலவேளைகளில் கூறுகின்றனர். விஷயம் அதுவல்ல என்று பவுல் கூறினார்; அது, தேவனுடைய ஆவி நமக்குக் கொடுக்கப்பட்டபோது மாறிப்போயிற்று.

நாம் மாம்சத்திற்குக் கடனாளிகள் அல்ல என்றால், நாம் எதற்கு (அல்லது யாருக்கு) கடன்பட்டிருக்கிறோம்? பவுல் தமது வாக்கியத்தை முடிக்கா திருந்தார்; அவர் தமது அடுத்த சிந்தனைக்கு விரைவாய்ச் சென்றார் என்பது தெளிவு, இருப்பினும், அந்தச் சிந்தனையானது பின்வருவது போன்று முடிக்கப்பட வேண்டும்: "ஆனால் ஆவியின்படி பிழைப்பதற்கு [நாம் ஆவிக்குக் கடனாளிகளாயிருக்கிறோம்]." நாம் ஆவிக்குக் கடனாளிகளாக இருக்கிறோம்.

### நாம் செலுத்த வேண்டிய ஒரு கடன் (வசனம் 13)

ஆவியின்படி வாழ்வதற்குக் கடனைச் செலுத்த நாம் முயற்சிக்கிறோமா இல்லையா என்பது வேறுபாடு எதையாவது ஏற்படுத்துகிறதா? நிச்சய மாகவே! பவுல் முதலில் இப்பதிலுக்கான எதிர்மறைப் பக்கத்தைக் கையாண்டார்: "மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்" (வசனம் 13அ). "மாம்சத்தின்படி பிழைத்தல்" என்றால் என்ன? அது "ஒருவரின் எல்லை மாம்சத்திற்குள் அடங்கியிருக்கும்படி, அதாவது இந்த வாழ்வுபற்றிய கவலைகள்/அக்கறைகளுடன் வாழுதல்"[32] என்று அர்த்தப்படுகிறது. விதைப்பவன் உவமையில், இயேசு "உலகக் கவலைகளும், ஐசுவரியத்தின் மயக்கமும், மற்றவைகளைப்பற்றி உண்டாகிற இச்சைகளும்" வசனத்தை நெருக்கிப்போடுதல் பற்றிப் பேசினார் (மாற்கு 4:18). நாம் "மாம்சத்தின்படி வாழ்வோமென்றால்" நாம், "ஆவிக்குரிய வகையில் மரித்துவிடுவோம்." R. C. H. லென்ஸ்க்கீ என்பவர், "மனிதர்கள் தங்கள் மாம்ச இச்சைகளுக்கு இடம்கொடுக்கிறபோதே தாங்கள் உண்மையாக வாழ்வதாக எப்போதுமே நினைக்கின்றனர், ஆனால் உண்மை நிலையிலோ அவர்கள் நித்திய மரணத்திற்கு நேராக முன்னோக்கிச் செல்லு கின்றனர்" என்று எழுதினார்.[33]

பவுல் "சகோதரர்களுக்கு," தேவனுடைய குடும்பத்தின் உறுப்பினர்களுக்கு எடுத்துரைத்துக் கொண்டிருந்தார் என்பதைச் சிந்தையில் காத்துக்கொள்ளுங்கள். ஆவியானவர் உள்ளாக வாசம்பண்ணுகிற நிலையில் கிறிஸ்தவர்கள் ஆவியைப் புறக்கணிக்கவும்,[34] "மாம்சத்தின்படி" பிழைக்கவும், இவ்வாறாக ஆவிக்குரிய வகையில் "மரிக்கவும்" சாத்தியம் உள்ளதா? கவலைக்குரிய வகையில், இதற்கான பதில் ஆம் என்பதாகவே உள்ளது. அப்படிப்பட்டவை சாத்தியமாயிருப்பதில்லை என்றால், பவுலின் புத்தி கூறுதலில் கருத்து எதுவும் இருந்திராதே.

ஒரு கிறிஸ்தவர் வாழ *வேண்டிய முறை* அதுவல்ல. பவுல் இந்தக் கலந்துரையாடலின் நேர்மறையான பக்கம் திரும்பினார்: "ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால்[35] பிழைப்பீர்கள்" (வசனம் 13ஆ). "அழித்தால்" என்பது (*thanatos*, "மரணம்" என்பதிலிருந்து வந்த) *thanatoo* என்ற தனித்த ஒரு கிரேக்க வார்த்தையாக உள்ளது. *Thanatoo* என்பது "யாரேனும் ஒருவரைக் கொல்லுதல்" அல்லது "யாரேனும் ஒருவரைக் கொல்லப்படும்படி கையளித்தல்" என்று அர்த்தப்படும் பலத்த வார்த்தையாக உள்ளது. இது "மரணதண்டனை மற்றும் அதன் நிறைவேற்றம்" ஆகியவற்றில் பயன்படுத்தப்பட்டது.[36] கிறிஸ்தவர்கள் எதைத் தண்டனைக்கு உட்படுத்த வேண்டும் என்று பவுல் அறிவுறுத்தினார்? அது "சரீரத்தின் செய்கைகளை." இந்தச் சந்தர்ப்பப்பொருளில் நாம் "சரீரத்தின் *தவறான* செய்கைகள்" என்று இச்சொற்றொடரை மொழி பெயர்க்க முடியும் (NIV; JB வேதாகமங்களில் காணவும்). ஸ்டாட் என்பவர், "சரீரத்தின் தவறான செய்கைகளை" "தேவனையும் மற்ற மக்களையும் சேவித்து

ஊழியம் செய்வதற்குப் பதிலாக, நமக்கு நாமே சேவித்துக்கொண்டு ஊழியம் செய்துகொள்ளும் வகையில் நமது சரீரத்தின் [நமது கண்கள், காதுகள், வாய், கைகள் அல்லது பாதங்கள் ஆகியவற்றின்] ஒவ்வொரு உபயோகமும்" என்று விளக்கினார்.[37]

இதுபோன்ற வசனப்பகுதிகளைச் சிலர், உடலானது அடிக்கப்பட, சவுக்கால் அடிக்கப்பட அல்லது ஏதாவது ஒருவகையில் தண்டிக்கப்பட வேண்டும் என்று போதிக்கத் தவறாக நடைமுறைப்படுத்துகின்றனர்;[38] ஆனால் பவுல் போதித்தது அதுவல்ல. சரீரத்தின் *செய்கைகள்* அழிக்கப்பட வேண்டும் என்று மாத்திரமே அவர் கூறினார்.

இதை நாம் நமது சொந்தத்தில் செய்ய முடியுமா? இல்லை - ஆனால் இதை நாம் "ஆவியினால்" செய்ய முடியும் என்று பவுல் கூறினார்; அதாவது, உள்ளாக வாசம்பண்ணும் ஆவியானவரின் துணையுடன் நாம் இதைச் செய்யமுடியும். மீண்டுமாகப், பவுல் இது *எவ்வாறு* நடைபெறுகிறது என்று விளக்கவில்லை; அவர் இதுவே விஷயமாக உள்ளது என்று மாத்திரம் உறுதிப்படுத்தினார். கிறிஸ்தவர்கள் என்ற வகையில், நாம் கிறிஸ்தவரல்லாதவர்கள் கொண்டிராத ஆதாரவளங்களைக் கொண்டுள்ளோம். நம் வாழ்வின் அறைகூவல்களைச் சந்திப்பதில் நமக்கு உதவுவதற்குத் தேவனுடைய சொந்த ஆவியைக் கொண்டுள்ளோம். எபேசியர் 3ல் பவுல், நாம் "அவருடைய [தேவனுடைய] ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும்" என்று கூறினார் (வசனம் 16), அதாவது தேவன், "நாம் வேண்டிக்கொள்கிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமை யின்படியே, நமக்குச் செய்ய வல்லவராக" இருக்கிறார் என்று கூறினார் (வசனம் 20).

பவுலின் கவனமான சமானநிலையைக் கவனியுங்கள். "மாம்சத்தின் கிரியைகளை அழித்தல்" என்ற விஷயம், ஆவியினால் மாத்திரம் தனியாகவோ அல்லது நம்மால் மாத்திரம் தனியாகவோ சாதிக்கப்படுவதில்லை. பவுல், "ஆவியி*னாலே* சரீரத்தின் செய்கைகளை [*நீங்கள்*] அழித்தால்" என்று கூறினார். நாம் தேவபக்தியுள்ள வாழ்வை வாழ்வதற்கு நம்மால் இயன்ற அளவு மிகச்சிறப்பாகச் செயல்படுகிறோம்; மற்றும், அதேவேளையில், தேவையான பெலத்தைக் கர்த்தர் தரவேண்டும் என்று நாம் அவரைச் சார்ந்து இருக்கிறோம். சுயத்தையே சார்ந்திருப்பதற்குப் பதிலாக, நம் தேவனைச் சார்ந்திருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். *சுயத்தைச் சார்ந்திருத்தலின் சாலையானது சலிப்பு, ஏமாற்றம், மற்றும் தோல்வி ஆகியவற்றிற்கு வழிநடத்துகிறது; தேவனைச் சார்ந்திருத்தலின் சாலையானது மனசமாதானம் மற்றும் வெற்றி ஆகியவற்றிற்கு வழிநடத்துகிறது (ரோமர் 8:6, 37).*

இது தேவனுடைய உதவியுடன், நாம் இந்த வாழ்வில் பாவமற்ற பரிபூரண நிலையை அடைய இயலும் என்று அர்த்தப்படுகிறதா? ஒருக்காலும் இல்லை. பவுல் இவ்விடத்தில் நிகழ்கால வினைச்சொல்லைப் பயன்படுத்துவதைக் கவனியுங்கள்: "சரீரத்தின் செய்கைகளை அழித்தால்." கிரேக்க மொழியில், நிகழ்கால வினைச்சொல்லானது தொடர்ந்து நடைபெறும் செயலைச் சுட்டிக் காண்பிக்கிறது. மாம்சத்துடனான நமது யுத்தம், நாம் நமது கடைசி மூச்சை இழுத்துவிடும் வரையில் நடைபெறுகிற ஒரு தொடர்ந்த யுத்தமாக உள்ளது. இருப்பினும், பவுல் இது ஒரு நம்பிக்கையற்ற யுத்தமாக இருப்பதில்லை என்று

நமக்கு உறுதியளித்தார்; இது தேவன் நம் பக்கத்தில் இருக்க, நாம் போராடும் ஒரு யுத்தமாக உள்ளது (8:31-39ஐக் காணவும்)!

தேவனுடைய ஆவியின் துணையுடன் விளைவு என்னவாக இருக்கமுடியும்? "ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்" (வசனம் 13ஆ, இ); இப்போது, நாம் உண்மையிலேயே வாழத்தகுதியான வாழ்வைக் கொண்டிருக்க முடியும் (யோவான் 10:10ஐக் காணவும்); இனிவரும் காலத்தில், நாம் கர்த்தருடன் என்றென்றும் வாழும் வாழ்வைக் கொண்டிருக்க முடியும்.

## முடிவுரை: இரு அடைவிடங்கள்

நமது படிப்பில், நாம் செல்லக்கூடிய *இரு திசைகளைப்* பற்றி நாம் கண்டிருக்கிறோம்: மாம்சத்தின் வழி அல்லது ஆவியின் வழி. *வாசம்பண்ணும் இருவரைப்* பற்றி நாம் கற்றோம். நம்மில் பாவம் வாசம்பண்ணுகிறது அல்லது ஆவி நமக்குள் வாசம்பண்ணுகிறது. *இரு கடன்கள்* பற்றியும் நமக்கு கூறப்பட்டிருக்கிறது. கிறிஸ்தவர்கள் இனியும் பட்டிராத ஒரு கடன் (மாம்சத்துக்கு) மற்றும் இன்னும் நிலுவையிலுள்ள ஒரு கடன் (ஆவிக்கு). இப்படிப்பட்ட விஷயங்கள் முக்கியத்துவமானவைகளாக இருப்பது ஏன்? ஏனென்றால் மனிதகுலத்திற்கு *இரண்டு அடைவிடங்கள்* காத்திருக்கின்றன. நமது வேதவசனப்பகுதிக்குத் திரும்பிச் செல்லுங்கள், சென்று மரணமும் ஜீவனும் எவ்வாறு நேரெதிராக ஒப்பிடப்படுகின்றன என்று கண்ணோக்குங்கள்:

> மாம்சசிந்தை *மரணம்;* ஆவியின் சிந்தையோ *ஜீவனும்* சமாதானமுமாம் (வசனம் 6).
>
> மாம்சத்தின்படி பிழைத்தால் *சாவீர்கள்;* ஆவியினாலே சரீரத்தின் செய்கை களை அழித்தால் *பிழைப்பீர்கள்* (வசனம் 13).

இதை எளிமையாகக் கூறுவதென்றால், மாம்சம் *மரணத்தைக்* கொண்டுவரு கிறது, அதேவேளையில் ஆவி *ஜீவனைக்* கொண்டுவருகிறது.

*அடைவிடங்கள் இரண்டு* உள்ளன, ஆனால் *தீர்மானித்தல் ஒன்றே* ஒன்றுதான் உள்ளது. நீங்கள், மாம்சம் மற்றும் ஆவி ஆகிய இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுத்தாக வேண்டும். நீங்கள் அழியும் மாம்சமே உண்மையில் கருத்தில் கொள்ள வேண்டியது என்பதுபோன்று வாழத்தொடரலாம், அல்லது ஆவிக்குரியவை என்றும் அழியாதிருக்கும் என்று உறுதிப்பாட்டுடன் நீங்கள் வாழத்தொடங்கலாம். தேவனுடைய ஆவியை ஒரு கொடையாகப் பெறக் கூடுவதற்காக (நடபடிகள் 2:38), நீங்கள் இன்னமும் ஞானஸ்நானம் பெறா திருந்தால், அதை நீங்கள் இன்றே செய்யும்படி நான் உங்களை ஊக்குவிக்கிறேன். நீங்கள் ஒருகாலத்தில் ஞானஸ்நானம் பெற்று ஆனால் "மாம்சத்தின்படி வாழ்ந்துகொண்டு" இருந்தால் (ரோமர் 8:13அ), உடனே நீங்கள் மனந்திரும்பிக் கர்த்தரிடமாய்த் திரும்பும்படி உங்களை வேண்டிக்கொள்கிறேன் (நடபடிகள் 8:22)!

குறிப்பு

[1]இதேபோன்ற ஒரு நேர்மாறான கருத்திற்கு கலாத்தியர் 5:16-26ஐக் காணவும். [2]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 2d ed., rev. William F. Arndt and F. Wilbur Gingrich (Chicago: University of Chicago Press, 1957), 874. [3]Douglas J. Moo, *Romans,* The NIV Application Commentary (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 2000), 250. [4]Leslie C. Allen, "Romans," in *New International Bible Commentary,* ed. F. F. Bruce, H. L. Ellison, and G. C. D. Howley (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1986), 1331. [5]இவ்வகையான மன அமைவிற்கு வேதாகமரீதியான விவரிப்பு ஒன்றை, மத்தேயு 16:23ல் இயேசு பேதுருவைக் கடிந்துகொண்டதில் காணலாம். [6]Charles Spurgeon, *Spurgeon's Commentary on Great Chapters of the Bible,* comp. Tom Carter (Grand Rapids, Mich.: Kregel Publications, 1998), 259. [7]ஒரு "ஆவி" என்பது ஆங்கிலத்தில் சிறிய "s"ஐக்கொண்டு "spirit" என்று எழுதப்பட முடியும், இது "ஆவிக்குரியவைகள்" என்றாகும் (McCord), இது "மாம்சத்துக்குரியவைகளுக்கு" நேர்மாறானதாக உள்ளது. "ஆவிக்குரியவைகள்" என்பவை "ஆவிக்குரிய விஷயங்களாக" *இருப்பதால்* (மற்றும் எதிர்மாறு), இங்கு பெரிய "S" அல்லது சிறிய "s" என்பவை அதிகமான வேறுபாட்டை ஏற்படுத்துவதில்லை. [8]அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் பிற மேற்கத்தியக் கலாச்சாரங்களிலும் வாழ்கிறவர்கள், இந்த உற்பத்தி பொருளின்றி நம்மால் "வாழ இயலாது" என்று செயல் விளைவில் கூறும் *விளம்பரப்படுத்துதலைக்* குறிப்பிட முடியும். [9]Jim McGuiggan, *The Book of Romans,* Looking Into The Bible Series (Lubbock, Tex.: Montex Publishing Co., 1982), 237. [10]C. G. Wilke and Wilibald Grimm, *A Greek-English Lexicon of the New Testament,* trans. and rev. Joseph Henry Thayer (Edinburgh: T. & T. Clark, 1901; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1977), 265.

[11]Leon Morris, *The Epistle to the Romans* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co, 1988), 306. [12]சிலர், 7:1ல் தொடங்கிய நியாயப்பிரமாணம் பற்றிய பவுலின் கலந்துரையாடலுக்கு ரோமர் 8:7 முடிவுரையாக உள்ளது என்று கருதுகின்றனர். [13]நீங்கள், "மனித இக்கட்டு (7:14)" என்ற பாடத்தைத் தொடர்ந்து வந்த *sarx* என்ற வார்த்தையின் மீதான படிப்பை மறுகண்ணோட்டமிட விரும்பலாம். [14]கிரேக்க வசனத்தில் "நீங்கள்" என்பதில் இரட்டை வலியுறுத்தம் உள்ளது. முதலாவது, "நீங்கள்" என்பதற்கான கிரேக்க வார்த்தை ஒரு வினைச்சொல்லுடன் சேர்க்கப்படும்போது, அது "நீங்கள் இருக்கிறீர்கள்" என்று அர்த்தப்படுகிறது. இரண்டாவது, "நீங்கள்" என்பதற்கான வார்த்தையானது வலியுறுத்தத்திற்காக வாக்கியத்தின் முதலில் இடப்பட்டுள்ளது. [15]F. F. Bruce, *The Book of Acts,* rev. ed. (Grand Rapids, Mich.: Wm B. Eerdmans Publishing Co., 1988), 88. [16]Morris, 308. [17]Handley C. G. Moule, *The Epistle of St. Paul to the Romans,* 10th ed., The Expositor's Bible (London: Hodder and Stoughton, 1894), 206. [18]George Tipps, "Ask for the Ancient Paths," sermon preached at Judsonia church of Christ, Judsonia, Arkansas, 8 July 2003. [19]Bruce Barton, David Veerman, and Neil Wilson, *Romans,* Life Application Bible Commentary (Wheaton, Ill.: Tyndale House Publishers, 1992), xxvi. For additional references and a discussion on this definition of the word "Christian," see Roper, 429-30. [20]J. D. Thomas, *Romans,* The Living Word series (Austin, Tex.: Sweet Publishing Co., 1965), 57.

[21]கிரேக்க வசனத்தில் "ஆவி ஜீவனாக [உள்ளது]" என்றே நேரடி அர்த்தத்தில் உள்ளது. இவ்வாறாகச் சில மொழிபெயர்ப்புகளில் "ஆவி ஜீவனாக உள்ளது" என்றுள்ளது (KJVயைக் காணவும்). மீண்டுமாக ஒருசிறிய "s" அல்லது பெரிய "S" எது பயன்படுத்தப்பட்டாலும், போதனையானது அடிப்படையில் ஒரே மாதிரியாக உள்ளது: ஜீவனைக்கொடுக்கும் ஆவியானவர் *நமது* ஆவிகளுக்கு ஜீவனைக் கொடுக்கிறார். [22]"மாம்சம்" என்பதைக்கூறும் இன்னொரு வழிமுறை "சரீரம்" என்பதாகும் என்ற இன்னொரு சாத்தியமான விளக்கமும் உள்ளது. "மாம்சம் [ஆவிக்குரிய] மரணமாக உள்ளது." இருப்பினும், 10ம் வசனம் 11ம் வசனத்துடன் நெருங்கிய தொடர்புடையதாக உள்ளது, இது "சரீரம்" என்பது,

ஒவ்வொரு தனிநபரும் வாசம்பண்ணுகிற அழிந்துபோகும் உடல் என்ற விளக்கத்தை ஆதரிப்பதாயிருக்கும். [23]1 கொரிந்தியர் 15:22அ வைக் காணவும். மேலும் ரோமர் 5:15-21ன் மீதான கலந்துரையாடல்கள் மறுகண்ணோட்டமிடவும். [24]2 கொரிந்தியர் 4:16உடன் ஒப்பிடவும். [25]இவ்வசனத்தில் "நீதி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை "நீதிமானாக்கப்படுதல்" என்றும் மொழிபெயர்க்கப்பட முடியும். [26]John R. W. Stott, *The Message of Romans: God's Good News for the World,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1994), 227. [27]Adapted from McGuiggan, 240. [28]கிரேக்க மொழியில் இரண்டாம் வேற்றுமைத் தொடரானது நேரடியான செயப்படுபொருளைச் சுட்டிக் காண்பிக்கிறது மற்றும் நான்காம் வேற்றுமைத் தொடர் ஒரு மறைமுகமான செயப்படுபொருளை விளக்குகிறது. [29]J. W. McGarvey and Philip Y. Pendleton, *Thessalonians, Corinthians, Galatians and Romans* (Cincinnati: Standard Publishing, n.d.), 360. [30]"ஆவியானவர் நம் உயிர்த்தெழுதலில் முகவராக இருப்பார் என்றா அல்லது நாம் உயிர்ப்பிக்கப்படுவோம் என்பதற்கு உத்தரவாதமாக இருக்கிறார் என்றா, எதைப் பவுல் கூறுகிறார் என்பது தெளிவாக இருப்பதில்லை. இவ்விரண்டுமே உண்மையாகவே உள்ளன ..." (மோரீஸ், 311).

[31]Richard Rogers, *Paid in Full: A Commentary on Romans* (Lubbock, Tex.: Sunset Institute Press, 2002), 122. [32]Morris, 312. [33]R. C. H. Lenski, *The Interpretation of St. Paul's Epistle to the Romans* (N.p.: Lutheran Book Concern, 1936: reprint, Minneapolis: Augsburg Publishing House, 1961), 517. [34]பின்வரும் ஒரு பாடத்தில், நாம் நம்மால் ஆவியை "அவித்துப்போட முடியும்" என்ற உண்மையைப் பற்றிக் கலந்துரையாடுவோம் (1 தெசலோனிக்கேயர் 5:19). [35]KJV வேதாகமத்தில் "mortify" என்றுள்ளது. "Mortify" என்றால் "மரணத்திற்கு உட்படுத்துதல்" என்று அர்த்தமாகிறது, ஆனால் அவ்வார்த்தை இன்றைய நாட்களில் அதிகமாய்ப் பயன்படுத்தப்படுவதில்லை. NKJV வேதாகமத்தில் "put to death" என்றுள்ளது. [36]Bauer, 352. [37]Stott, 228. [38]நமது சரீரங்கள் தேவனுடைய ஆலயங்களாக உள்ளன (1 கொரிந்தியர் 6:19) மற்றும் அது இவ்வாறு தீதாகப் பயன்படுத்தப்படக்கூடாது (1 கொரிந்தியர் 3:17ஐக் காணவும்) என்று வேதாகமம் போதிக்கிறது.